**அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை 600 006**

**மேல்நிலை இரண்டாமாண்டு – மே 2022**

**வரலாறு – விடைக்குறிப்புகள்**

**பகுதி–I**

**குறிப்பு:**(i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் **குறியீட்டுடன்** விடையினையும் சேர்த்து எழுதவும்.

| I. **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** | | | 20 ×1 = 20 | | |
|---|---|---|---|---|---|
| **TYPE - A** | | | **TYPE - B** | | |
| **வினா எண்** | **குறிப்பு** | **விடை** | **வினா எண்** | **குறிப்பு** | **விடை** |
| 1 | (அ) | வினோபா பாவே | 1 | (அ) | வில்லியம் ஹோவே |
| 2 | (ஈ) | லின்லித்கோ பிரபு | 2 | (ஆ) | பாலகங்காதர திலகர் |
| 3 | (இ) | W.C. பானர்ஜி | 3 | (ஆ) | கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது |
| 4 | (ஆ) | டிசம்பர் 31, 1929 | 4 | (ஆ) | யாமமோடோ |
| 5 | (ஆ) | யாமமோடோ | 5 | (ஆ) | பங்கிம் சந்திர சாட்டர்ஜி–ஆனந்த மடம் |
| 6 | (இ) | கௌர்னே | 6 | (இ) | பாரசீகம் |
| 7 | (இ) | (1) - (iv),(2)–(iii), (3)–(ii) , (4)–(i) | 7 | (இ) | கௌர்னே |
| 8 | (அ) | எஸ். ஏ. டாங்கே | 8 | (இ) | W.C. பானர்ஜி |
| 9 | (அ) | ஆந்திரா | 9 | (ஆ) | (2), (1), (4), (3) |
| 10 | (ஆ) | பாலகங்காதர திலகர் | 10 | (ஆ) | டிசம்பர் 31, 1929 |
| 11 | (ஆ) | பங்கிம் சந்திர சாட்டர்ஜி–ஆனந்த மடம் | 11 | (ஆ) | 2005 |
| 12 | (ஆ) | கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது | 12 | (அ) | எஸ். ஏ. டாங்கே |
| 13 | (இ) | டியூலரிஸ் | 13 | (ஈ) | ஜப்பான் |
| 14 | (ஆ) | 2005 | 14 | (ஈ) | அன்னி பெசண்ட் |
| 15 | (ஈ) | 1945 அக்டோபர் 24 | 15 | (இ) | (1) - (iv),(2)–(iii), (3)–(ii) , (4)–(i) |
| 16 | (இ) | பாரசீகம் | 16 | (அ) | ஆந்திரா |
| 17 | (ஈ) | ஜப்பான் | 17 | (ஈ) | லின்லித்கோ பிரபு |
| 18 | (அ) | வில்லியம் ஹோவே | 18 | (அ) | வினோபா பாவே |
| 19 | (ஈ) | அன்னி பெசண்ட் | 19 | (ஈ) | 1945 அக்டோபர் 24 |
| 20 | (ஆ) | (2), (1), (4),(3) | 20 | (இ) | டியூலரிஸ் |

<table>
<tr><td colspan="3"><u>பகுதி–II</u></td></tr>
<tr><td colspan="2">ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 30 க்கு கட்டாயம் விடையளிக்கவும்</td><td>7 ×2 = 14</td></tr>
<tr><td>வினா எண்</td><td>விடை</td><td>மதிப்பெண்</td></tr>
<tr><td>21.</td><td>தேசியம்<br>தேசியம் என்பது ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும், பக்தியோடும் இருத்தல்.<br>❖ தனது நாட்டை ஏனைய நாடுகளைவிட உயர்வான இடத்தில் வைத்துப் போற்றுதல்.<br>❖ தனது நாட்டின் பண்பாடு விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துதல்.</td><td></td></tr>
<tr><td>22.</td><td>மிதவாதிகளின் இறைஞ்சுதல் கொள்கை<br>❖ மிதவாதிகளின் கவனமான அணுகுமுறை ஆங்கிலேயரிடம் மன்றாடுதல், மனு சமர்ப்பித்தல் போன்றவையே மிதவாதிகளின் இறைஞ்சுதல் கொள்கை.<br>❖ இதை தீவிரவாதிகள் அல்லது முற்போக்காளர்கள் அல்லது போர்குணம் மிக்கவர்கள் எதிர்த்தனர்.</td><td></td></tr>
<tr><td>23.</td><td>அன்னி பெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்கள்<br>❖ வாராந்திரப் பத்திரிக்கை – காமன் வீல் (1914)<br>❖ நியு இந்தியா'' என்ற தினசரி பத்திரிக்கை<br>❖ புத்தகம் – How India wrought for freedom</td><td></td></tr>
<tr><td>24.</td><td>காந்தியடிகளின் சம்பரான் சத்தியாகிரகத்தின்போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள்<br>❖ ராஜேந்திர பிரசாத் மற்றும் மஜாருல் ஹக்<br>❖ ஆச்சார்ய கிருபளானி மற்றும் மஹாதேவ தேசாய்</td><td></td></tr>
<tr><td>25.</td><td>இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை ஜே.என்.டாடா.<br>❖ ஜே.என்.டாடா என்று அழைக்கப்பட்ட ஜாம்ஷெட்ஜி நுஸர்வஞ்சி டாடா பரோடாவில் பிறந்தவர்.<br>❖ பார்சி வணிகக் குடும்பத்திலிருந்து வந்தவர்.<br>❖ இந்தியாவின் முதல் வெற்றிகரமான தொழில் அதிபர் ஆவர்.<br>எனவே இவர் இந்திய ''நவீன தொழிலகங்களின் தந்தை'' என அழைக்கப்படுகின்றார்.</td><td>எதேனும் இரண்டு குறிப்புகள்</td></tr>
<tr><td>26.</td><td>ஆகஸ்ட் கொடையின் சிறப்பு.<br>❖ வரையறுக்கப்படாத ஒரு தேதியில் டொமினியன் அந்தஸ்து.<br>❖ அதிகமான இந்தியர்களைக் கொண்டு அரசுப் பிரதிநிதியின் குழுவை விரிவாக்கம் செய்தல்.<br>❖ இந்திய உறுப்பினர்களைக் கொண்ட போர் ஆலோசனைக் குழுவை உருவாக்குதல்.<br>❖ சிறுபான்மையினர் உரிமைகளை அங்கீகரித்தல்.</td><td>எதேனும் இரண்டு குறிப்புகள்</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 27. | **அரசமைப்பின் ஷரத்து 370 ன் முக்கியத்துவம்**<br>❖ காஷ்மீருக்கு தனி அந்தஸ்து வழங்கப்படுவதே அரசியலமைப்பு ஷரத்து 370–ன் முக்கியத்துவம் ஆகும்.<br>❖ மஹாராஜா ஹரிசிங் காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க இணைப்புறுதி ஆவணத்தில் கையொப்பமிட்டார்.<br>❖ இந்திய தலைவர்களால் காஷ்மீர் மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில் காஷ்மீருக்கு தனி அந்தஸ்து வழங்கப்பட்டது. | எதேனும் இரண்டு குறிப்புகள் |
| 28. | **வட அமெரிக்காவின் ஐரோப்பியக் காலனிகள் பூர்வகுடிமக்கள் மீது ஏற்பட்ட தாக்கங்கள்**<br>❖ பூர்வகுடிகளை அழித்தொழிக்க ஐரோப்பியர்கள் பின்பற்றிய தந்திரங்களில் ஒன்று நோய்களைப் பரப்புவதாகும்.<br>❖ அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்படுத்திய போர்வைகளை செவ்விந்தியர்களுக்கு விநியோகம் செய்தல்.<br>❖ காலனிவாதிகள் தங்கம் தேடும் முயற்சியில் பழங்குடி மக்களின் கிராமங்களின் பதுங்கியிருந்து கொடூரமாகத் தாக்கினார். | எதேனும் இரண்டு குறிப்புகள் |
| 29. | **மூனிச் ஒப்பந்தத்தின் கூறுகள்**<br>❖ மூனிச் மாநாட்டில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி கலந்து கொண்டது. சூடட்டன்லாந்து பகுதியை ஜெர்மனி ஆக்கிரமித்துக்கொள்ள ஒப்புக்கொள்ளப்பட்டது.<br>❖ ஆனால் செக்கோஸ்லாவேகியாவின் பகுதிகளை போலந்தும், ஹங்கேரிக்கும் பிரித்துக்கொடுக்க முடிவு செய்யப்பட்டது. | |
| 30. | **முதல் உலகப் போரில் பங்கு பெற்ற மைய நாடுகள்**<br>❖ ஜெர்மனி<br>❖ ஆஸ்திரிய – ஹங்கேரி<br>❖ பல்கேரியா<br>❖ துருக்கி | |

**பகுதி III**

பின்வரும் வினாக்களில் எவையேனும் **ஏழு** வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும் வினா எண்.**40**க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும்.

| **வினா எண்** | **விடை** | **7×3=21** |
|---|---|---|
| 31. | **மெக்காலேயின் இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்**<br>❖ **1835** மெக்காலே புகழ்பெற்ற இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை வெளியிட்டார்.<br>❖ ஆங்கில வழியில் மேற்கத்திய கல்விக்கு ஆதரவாக வாதிட்டார்.<br>❖ நிறத்தில் இந்தியராகவும், ஒழுக்கத்தில் அறிவில் ஆங்கிலேயராக இருக்கும் ஒரு மக்கள் பிரிவினரை இந்தியாவுக்குள் உருவாக்க விரும்பினார். | 3 |

| | | |
|---|---|---|
| 32. | **காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடக் காரணமாக சூரத் மாநாட்டின் செயல்முறைகள்:**<br>❖ கல்கத்தா மாநாட்டு முடிவுகளால் மிதவாத தேசியவாதிகள் அச்சம் கொண்டு மாநாட்டை சூரத் நகருக்கு மாற்றினார்.<br>❖ மிதவாத தேசியவாதிகளின் வேட்பாளரான ராஷ்பிகாரி கோஷ் என்பவருக்கு எதிராக தீவிர தேசியவாதிகள் லாலா லஜபதிராயின் பெயரை முன்மொழிந்தனர்.<br>❖ இயக்கத்தில் பிளவு ஏற்படுவதை தவிர்ப்பதற்காக லாலா லஜபதிராய் போட்டியிட மறுத்தார்.<br>❖ இறுதியில் மாநாடு குழப்பத்தில் முடிந்தது. | ஏதேனும் மூன்று குறிப்புகள் |
| 33. | **மாற்றத்தை விரும்புபவர்கள்**<br>❖ தீவிர அரசியலுக்குத் திரும்ப வேண்டும் என்று விரும்பினர்.<br>❖ சட்டப் பேரவையில் நுழைய விரும்பினர்.<br>❖ சித்தரஞ்சன்தாஸ், மோதிலால் நேரு மற்றும் சத்திய மூர்த்தி போன்றவர்கள் முக்கிய தலைவர்கள்.<br>**மாற்றத்தை விரும்பாதவர்கள்**<br>❖ காந்தியடிகளின் வழியைப் பின்பற்ற விரும்பினர்.<br>❖ சட்ட பேரவையில் நுழைவை எதிர்த்தனர்.<br>❖ வல்லபாய் பட்டேல், இராஜேந்திர பிரசாத் மற்றும் இராஜாஜி போன்றவர்கள் முக்கிய தலைவர்கள். | ஏதேனும் மூன்று குறிப்புகள் |
| 34. | **சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் திட்டமிடுதல்:**<br>❖ சிட்டகாங்கை கைப்பற்றுவதற்கு கொரில்லா பாணி தாக்குதலை நடத்த திட்டமிட்டார்.<br>❖ 1930 ஏப்ரல் 18 அன்று இரவில் சிட்டகாங் படைதளம் தாக்கப்பட்டது.<br>❖ ரயில்வே, தந்தி, அலுவலகம், காவல் முகாம்கள் தாக்கப்பட்டு சிட்டகாங் தனிமைப்படுத்தப்பட்டது. | |
| 35. | **காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைப் பற்றி சிந்தனை**<br>❖ விடுதலைக்கான எந்த உறுதியும் கொடுக்காமல் காலனிய அரசு இழுத்தடித்தது.<br>❖ இரண்டாம் உலகப் போரில் சுபாஷ் சந்திர போஸ் அச்சு நாடுகளை ஆதரித்தார்.<br>❖ 1942இல் போஸ் ஜெர்மனியில் இருந்து ஆசாத் ஹிந்த் ரேடியோ மூலம் பேசினார்.<br>❖ இந்திய தேசிய இயக்கத்தையும், காந்தியையும் சர்ச்சில் வெறுப்புடன் பார்த்தார். | ஏதேனும் மூன்று குறிப்புகள் |
| 36. | <u>**இந்திய வேளாண்மையின் பின் தங்கிய நிலைக்கான காரணங்கள்**</u><br>❖ வேளாண்மையின் பின்தங்கிய நிலையை இருகாரணிகளோடு தொடர்பு படுத்தி பார்க்கலாம்.<br>❖ ஒன்று நிறுவன அடிப்படையிலானது, மற்றொன்று தொழில்நுட்பம் சார்ந்தது ஆகும்.<br>❖ நிறுவனம் சார்ந்த காரணிகள் என்பது நில உடைமை வர்க்கத்தை சேர்ந்தோருக்கும் விவசாய தொழிலாளர் வர்க்கத்தை சேர்ந்தோர்க்கும் இடையே நிலவிய சமூக பொருளாதார உறவுகளை குறிப்பதாகும்.<br>❖ தொழில்நுட்ப காரணிகள் என்பது சிறந்த விதைகள் மேம்படுத்தப்பட்ட | ஏதேனும் மூன்று குறிப்புகள் |

| | | |
|---|---|---|
| | வேளாண்மை முறைகள், ரசாயண உரங்களை பயன்படுத்துதல் உள்ளிட்ட நீர்பாசன வசதிகள் ஆகியவற்றோடு தொடர்புடையதாகும். | |
| 37. | **1789ஆம் ஆண்டு புரட்சிக்கு நீண்ட காலத்துக்கு முன்னதாகவே கருத்துக்களின் புரட்சி:**<br>❖ பிரெஞ்சு புரட்சி வெடிப்பதற்காக சமூகத்தை தயார் செய்வதில் வால்டேர், மாண்டெஸ்கியூ, ரூசோ ஆகியோரின் எழுத்துக்கள் முக்கிய பங்கு வகித்தன.<br>❖ ரூஸோ தமது சமூக ஒப்பந்தம் என்ற நூலில் ஆள்பவர் நியாயமான முறையில் ஆட்சி செய்தால் அவர் மக்களால் மதிக்கப்படுவார் என்றும், நேர்மையற்ற முறையில் ஆட்சி செய்தால் தண்டிக்கப்பட வேண்டும் என கூறினார்.<br>❖ மாண்டெஸ்கியூ தமது ‘சட்டங்களின் சாரம்’ என்ற நூலில் அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிக்கப்படாமல், சட்டமியற்றுதல், சட்டங்கள் செயல்படுத்துதல், நீதித்துறை என பிரிக்கபட வேண்டுமென கூறினார்.<br>❖ வால்டேர் ‘‘பதினான்காம்லூயியின் காலம்’’ என்ற தமது நூலில் பிரெஞ்சுக்காரர்களின் மதம் சார்ந்த மூட நம்பிக்கைகளை எதிர்த்ததோடு, முடியாட்சி மன்னரின் கீழ் நடைபெற்ற பிரெஞ்சு நிர்வாகத்தை விமர்சித்தார். | ஏதேனும் மூன்று குறிப்புகள் |
| 38. | **அகழிப்போர்**<br>❖ முதல் உலகப்போர் எழுப்பிய ஆபத்தான சூழல் வீரர்களைத் தங்கள் உடலையும், உயிரையும் பாதுகாக்கும் பொருட்டு நிலத்தை தோண்டி அதனுள் அடைக்கலம் தேட வைத்தது.<br>❖ உலகப்போரை அடையாளபடுத்தும் அகழிமுறையானது இரண்டு முதல் நான்கு அகழிகள் ஒன்றனுக்கு இணையாக மற்றொன்று செல்வதேயாகும்.<br>❖ அகழிகளின் முக்கிய வரிசைகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்படவும் பின்புறத்தில் தொடர் இணைப்பு அகழிகளும் ஏற்படுத்தப்பட்டன.<br>❖ அகழிகளின் மூலம் உணவு, வெடிபொருட்கள், புதிய துருப்புகள், கடிதங்கள், ஆணைகள் போன்றவை பரிமாற்றம் செய்யப்பட்டன. | ஏதேனும் மூன்று குறிப்புகள் |
| 39. | **இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகள்:**<br>❖ ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளின் பெரும் துறைமுகங்கள் அழிக்கப்பட்டன.<br>❖ சுமார் 6 கோடி மக்கள் உயிரிழந்தனர்.<br>❖ ஜெர்மனி தனது செல்வாக்கை இழந்தது.<br>❖ மன்னராட்சி முறை ஐரோப்பாவில் வீழ்ச்சியடைந்தது.<br>❖ அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன்கள் உலக வல்லரசாயின. | ஏதேனும் மூன்று குறிப்புகள் |
| 40. | **ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகள்:**<br>❖ பொருளாதாரத்தை விரிவுபடுத்துதல்.<br>❖ தேசிய வருமானத்திலும், தனிநபர் வருமானத்திலும் குறிப்பிடத்தகுந்த வளர்ச்சி.<br>❖ தொழிற்சாலைகளின் உற்பத்தி அதிகரிப்பு.<br>❖ வேளாண்மையில் நவீன இடுபொருட்களைப் பயன்படுத்துவது. அதிகரித்ததுடன் வேளாண் உற்பத்தியும் அதிகரித்தது.<br>❖ அதிக அளவில் பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதாரம். | ஏதேனும் மூன்று குறிப்புகள் |

| பகுதி –IV | |
|---|---|
| அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். | 7×5=35 |

| வினா எண் | விடை | |
|---|---|---|
| 41 (அ) | ❖ 1857 – ன் பேரெழுச்சி<br>❖ இனப்பாகுபாடு<br>❖ இந்தியர்களுக்கு எதிரான அடக்குமுறை<br>❖ இல்பர்ட் மசோதா | விளக்கத்துடன் |
| | (அல்லது) | |
| 41 (ஆ) | ❖ திலகரின் தன்னாட்சி இயக்கம்<br>❖ அன்னிபெசண்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கம் | விளக்கத்துடன் |
| 42 அ) | ❖ கல்விப்பணி<br>❖ அம்பேத்கரின் சமூக நீதிக்கான செயல்பாடுகள் | விளக்கத்துடன் |
| | (அல்லது) | |
| 42(ஆ) | ❖ பகத்சிங்<br>❖ பகத்சிங் குண்டுவீச்சு<br>❖ லாகூர் சதி வழக்கு<br>❖ பகத்சிங் தூக்கிலிடப்படுதல் | விளக்கத்துடன் |
| 43(அ) | **(அ) இராஜாஜி திட்டம்**<br>❖ போருக்குப் பின் ஒரு ஆணையத்தின் மூலம் இஸ்லாமியர்கள் பெரும் பான்மையில் வாழும் மாவட்டங்களை பிரித்தெடுத்து<br>❖ அங்கு வயது தகுதி அடைந்தோரைக் கொண்டு வாக்கெடுப்பு நடத்தி பாகிஸ்தான் உருவாக்கம் பற்றிய முடிவை எடுத்தல் வேண்டும்.<br>❖ ஒரு வேளை ஓட்டெடுப்பின் முடிவில் பிரிவினை உறுதி செய்யப்பட்டால் அதிமுக்கிய பணிகளான பாதுகாப்பு தொலை தொடர்பு போன்றவற்றை பொதுவில் செயல்படுத்த ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும்.<br>❖ எல்லையில் அமையப்பெற்ற மாவட்டங்களுக்கு இரு இறையாண்மை கொண்ட நாடுகளில் ஏதேனும் ஒன்றில் சேர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.<br>❖ இத்திட்டம் யாவும் முழுமையான அதிகார மாற்றம் ஏற்பட்ட பின் செயல்முறைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.<br>❖ 1944–ல் காந்தியடிகள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபின் இராஜாஜி திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஜின்னாவோடு பேச்சு வார்த்தை நடத்த முன்வந்தார்.<br>ஆனால் பேச்சுவார்த்தையில் எந்தமுடிவும் எட்டப்படவில்லை. | |
| | (அல்லது) | |
| 43(ஆ) | ❖ ஹைதராபாத் இணைப்பு<br>❖ காஷ்மீர் இணைப்பு<br>❖ ஜீனாகத் இணைப்பு | விளக்கத்துடன் |
| 44(அ) | ❖ வணிகப் புரட்சியின் தாக்கம்<br>❖ காலனி ஆதிக்கம் | ஏதேனும் ஐந்து விளக்கத்துடன் |

| | | |
|---|---|---|
| | ❖ சந்தை விரிவாக்கம்<br>❖ மூலதனம்<br>❖ மூலவளங்கள்<br>❖ அரசியல் உறுதித்தன்மை<br>❖ வேளாண்மையில் ஏற்பட்ட முன்னேற்றம்<br>❖ கடற்கரை பகுதியில் ஆதிக்கம்<br>❖ புவியியல் அமைப்பு<br>❖ நவீன சமூகத்தின் மீது தொழிற்புரட்சியின் தாக்கம் | |
| | **(அல்லது)** | |
| 44(ஆ) | ❖ வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம்<br>❖ அமைதி உடன் படிக்கையின் நியாயமற்ற தன்மை | விளக்கத்துடன் |
| 45(அ) | ❖ ஸார் இணைப்பு<br>❖ ரைன்லாந்து இணைப்பு<br>❖ ஆஸ்திரியா இணைப்பு<br>❖ சூடட்டன்லாந்து ஆக்கிரமிப்பு<br>❖ மூனிச் ஒப்பந்தம் | விளக்கத்துடன் |
| | **(அல்லது)** | |
| 45(ஆ) | ❖ பாலஸ்தீனம் பிரிக்கப்பட்டது<br>❖ இஸ்ரேல் சுதந்திர நாடாக அறிவிப்பு<br>❖ ஐ.நா. சபையின் ஈடுபாடு<br>❖ அமெரிக்கா போர் தளவாடங்கள் உதவி<br>❖ இஸ்ரேல் – எகிப்து போர் | விளக்கத்துடன் |
| 46(அ) | ❖ சுதேசி இயக்கம் (திருநெல்வேலி)<br>❖ வட்டாரமொழி சொற்பொழிவு கலையின் வளர்ச்சி<br>❖ வ.உ.சியும், சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியும் (SSNC)<br>❖ கோரல் நூற்பாலை வேலை நிறுத்தம் | விளக்கத்துடன் |
| | **(அல்லது)** | |
| 46(ஆ) | இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற 5 இடங்கள்<br><br> | 5 |
| 47(அ) | ❖ நாவாய் சட்டம்<br>❖ ஏழாண்டு போர் | விளக்கத்துடன் |

| | | |
|---|---|---|
| | ❖ சர்க்கரை, சர்க்கரைப்பாகு ஆகியவற்றின் மீது வரிவிதிப்பு<br>❖ முத்திரைத்தாள் சட்டம் 1765<br>❖ பாஸ்டன் படுகொலை 1770<br>❖ பாஸ்டன் தேநீர் விருந்து 1773 | |
| | **(அல்லது)** | |
| 47(ஆ) | **ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகள்**<br>1920– ஒத்துழையாமை இயக்கம்<br>1921– மலபார் கலகம்<br>1922– சௌரி சௌரா<br>1930– தண்டியாத்திரை – உப்புச்சத்தியாகிரகம் – சட்ட மறுப்பு இயக்கம் / முதல் வட்டமேசை மாநாடு<br>1931– காந்தி இர்வின் ஒப்பந்தம், இரண்டாம் வட்டமேஜை மாநாடு<br>1932– வகுப்புவாரி தொகுதி ஒதுக்கீடு, ஃபூனா ஒப்பந்தம், மூன்றாம் வட்டமேஜை மாநாடு<br>1937– மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை<br>1940– ஆகஸ்ட் கொடை / லாகூர் தீர்மானம்<br>1942– கிரிப்ஸ் தூதுக்குழு / வெள்ளையனே வெளியேறு இயக்கம்<br>1945 – வேவல் சட்டம் / சிம்லா மாநாடு<br>1946 – அமைச்சரவைத் தூதுக்குழு / நேரடி நடவடிக்கை / இடைக்கால அரசாங்கம்<br>1947– இந்தியா விடுதலை அடைதல்<br>1948 – மகாத்மா காந்தி படுகொலை<br>1950 – இந்தியா குடியரசு நாடாக மாறுதல் | |